## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 5-6 - கடல்ஞாலம்
**(கால்ஞாலத்தீசனைக் காணாமல் நொந்து, அவன் தன்மைகளை அநுகரித்து உயிர் தரிக்கப் பார்க்கிற பராங்குச நாயகியின் நிலை கண்ட தாய், 'எம்பெருமான் ஆவேசித்தானோ?' என்று நொந்து கூறும் பாசுரம்)**

3172 * கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும் *
கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும் *
கடல்ஞாலம் கொண்டேனும் யானே என்னும் *
கடல்ஞாலம் கீண்டேனும் யானே என்னும் **
கடல்ஞாலம் உண்டேனும் யானே என்னும் *
கடல்ஞாலத்தீசன் வந்தேறக் கொலோ? *
கடல்ஞாலத்தீர்க்கு இவை என் சொல்லுகேன்? *
கடல்ஞாலத்து என் மகள் கற்கின்றனவே 1

3173 கற்கும் கல்விக்கு எல்லை இலனே என்னும் *
கற்கும் கல்வி ஆவேனும் யானே என்னும் *
கற்கும் கல்வி செய்வேனும் யானே என்னும் *
கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே என்னும் **
கற்கும் கல்விச் சாரமும் யானே என்னும் *
கற்கும் கல்வி நாதன் வந்தேறக் கொலோ? *
கற்கும் கல்வியீர்க்கு இவை என் சொல்லுகேன்? *
கற்கும் கல்வி என் மகள் காண்கின்றனவே 2

3174 காண்கின்ற நிலம் எல்லாம் யானே என்னும் *
காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும் *
காண்கின்ற வெந்தீ எல்லாம் யானே என்னும் *
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே என்னும் **
காண்கின்ற கடல் எல்லாம் யானே என்னும் *
காண்கின்ற கடல்வண்ணன் ஏறக் கொலோ? *
காண்கின்ற உலகத்தீர்க்கு என் சொல்லுகேன்? *
காண்கின்ற என் காரிகை செய்கின்றனவே 3

3175 செய்கின்ற கிதியெல்லாம் யானே என்னும் *
செய்வானின்றனகளும் யானே என்னும் *
செய்து முன் இறந்தவும் யானே என்னும் *
செய்கைப் பயன் உண்பேனும் யானே என்னும் **
செய்வார்களைச் செய்வேனும் யானே என்னும் *
செய்யகமலக் கண்ணன் ஏறக் கொலோ? *
செய்ய உலகத்தீர்க்கு இவை என் சொல்லுகேன்? *
செய்ய கனிவாய் இளவான் திறத்தே 4

3176 திறம்பாமல் மண் காக்கின்றேன் யானே என்னும் *
திறம்பாமல் மலை எடுத்தேனே என்னும் *
திறம்பாமல் அசுரரைக் கொன்றேனே என்னும் *
திறம் காட்டி அன்று ஐவரைக் காத்தேனே என்னும் **
திறம்பாமல் கடல் கடைந்தேனே என்னும் *
திறம்பாத கடல்வண்ணன் ஏறக் கொலோ? *
திறம்பாத உலகத்தீர்க்கு என் சொல்லுகேன்? *
திறம்பாது என் திருமகள் எய்தினவே 5

3177 இனவேய் மலை ஏந்தினேன் யானே என்னும் *
இனவேறுகள் செற்றேனும் யானே என்னும் *
இனவான் கன்று மேய்த்தேனும் யானே என்னும் *
இனவாநிரை காத்தேனும் யானே என்னும் **
இனவாயர் தலைவனும் யானே என்னும் *
இனத்தேவர் தலைவன் வந்தேறக் கொலோ? *
இனவேற்கண் நல்லீர்க்கு இவை என் சொல்லுகேன்? *
இனவேற்கண்ணி என் மகள் உற்றனவே 6

3178 உற்றார்கள் எனக்கில்லை யாரும் என்னும் *
உற்றார்கள் எனக்கிங்கு எல்லாரும் என்னும் *
உற்றார்களைச் செய்வேனும் யானே என்னும் *
உற்றார்களை அழிப்பேனும் யானே என்னும் **
உற்றார்களுக்கு[1] உற்றேனும் யானே என்னும் *
உற்றாரிலி மாயன் வந்தேறக் கொலோ? *
உற்றீர்கட்கு என் சொல்லிச் சொல்லுகேன் யான்? *
உற்று என்னுடைப் பேதை உரைக்கின்றனவே 7

3179 உரைக்கின்ற முக்கண்பிரான் யானே என்னும் *
உரைக்கின்ற திசைமுகன் யானே என்னும் *
உரைக்கின்ற அமரரும் யானே என்னும் *
உரைக்கின்ற அமரர் கோன் யானே என்னும் **
உரைக்கின்ற முனிவரும் யானே என்னும் *
உரைக்கின்ற முகில்வண்ணன் ஏறக் கொலோ? *
உரைக்கின்ற உலகத்தீர்க்கு என் சொல்லுகேன்? *
உரைக்கின்ற என் கோமள ஒண்கொடிக்கே 8

3180 கொடிய வினை யாதும் இலனே என்னும் *
கொடிய வினை ஆவேனும் யானே என்னும் *
கொடிய வினை செய்வேனும் யானே என்னும் *
கொடிய வினை தீர்ப்பேனும் யானே என்னும் **
கொடியான் இலங்கை செற்றேனே என்னும் *

[1] உற்றார்கட்கு

கொடிய புள்ளுடையவன் ஏறக் கொலோ? *
கொடிய உலகத்தீர்க்கு இவை என் சொல்லுகேன்? *
கொடியேன் கொடி என் மகள் கோலங்களே 9

3181 கோலம் கொள் சுவர்க்கமும் யானே என்னும் *
கோலமில் நரகமும் யானே என்னும் *
கோலம் திகழ் மோக்கமும் யானே என்னும் *
கோலம் கொள் உயிர்களும் யானே என்னும் **
கோலம் கொள் தனி முதல் யானே என்னும் *
கோலம் கொள் முகில்வண்ணன் ஏறக் கொலோ? *
கோலம் கொள் உலகத்தீர்க்கு என் சொல்லுகேன்? *
கோலம் திகழ் கோதை என் கூந்தலுக்கே 10

3182 * கூந்தல் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும் *
குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை *
வாய்ந்த வழுதிநாடன் * மன்னு
குருகூர்ச் சடகோபன் குற்றேவல் செய்து **
ஆய்ந்த தமிழ் மாலை * ஆயிரத்துள்
இவையுமோர்[2] பத்தும் வல்லார் * உலகில்
ஏந்து[3] பெருஞ்செல்வத்தாராய்த் * திருமால்
அடியார்களைப் பூசிக்க நோற்றார்களே 11

**அடிவரவு:** கடல் கற்கும் காண் செய்கின்ற திறம்பா இனவேய் உற்றார்
உரை கொடிய கோலம் கூந்தல் நோற்ற

[2] இவையொரு
[3] ஏய்ந்த